# 3 பிரிவுகளில் சிறந்த சேவையாற்றிய 5 தாதியர்களுக்கு விருதுகள்

பெட்டாலிங் ஜெயா ரோட்டரி சங்கம் வழங்கியது



படம்: தி. மோகன்




கோலாலம்பூர், அக். 23–
தேசிய சிறுநீரக அறநிறுவனம், செயின்ட் ஜோன் ஆம்புலன்ஸ் மலேசியா, எம்ஏஏ மெடிக்கேர் ஆகிய மூன்று அரசு சார்பற்ற பிரிவுகளில் பணியாற்றுகின்ற 5 தாதியர்களுக்கு பெட்டாலிங் ஜெயா ரோட்டரி சங்கம் நேற்று விருதளித்து சிறப்பித்தது.

அக்டோபர் மாதத்தில் ரோட்டரி சங்கங்களின் உலகளாவிய நிலையில் தொழில் பயிற்சி விருதுகளை வழங்குகின்ற நடைமுறையின் அடிப்படையில் மலேசியாவில் இந்த ஐவருக்கும் சிலாங்கூர் தொழிற்பயிற்சி சேவை விருதுகள் வழங்கப்பட்டன.

சமுதாயத்திற்கு இவர்கள் செய்த தன்னலமற்ற சேவைக்காக பெட்டாலிங் ஜெயா ரோட்டரி சங்கம் இவர்களை அழைத்து கௌரவித்தது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு பொறுமையுடனும் கனிவுடனும் இவர்கள் ஆற்றிய சேவைக்காக அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரின் சேவைத் திறனை ஆராய்ந்து மதிப்பிட்டு அவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

தேசிய சிறுநீரக அறநிறுவனத்தைச் சேர்ந்த சித்தி பாத்திமா பிந்தி பஷிர், தேசிய சிறுநீரக அறநிறுவனத்தைச் சேர்ந்த ரோஸ்மா பிந்தி முகமட், செயின்ட் ஜோன்ஸ் ஆம்புலன்சைச் சேர்ந்த சுமதி த/பெ சுப்பிரமணியம், செயின்ட் ஜோன்ஸ் ஆம்புலன்சைச் சேர்ந்த ஹஸ்லினா பிந்தி ஹெல்மி, எம்ஏஏ மெடிக்கேரைச் சேர்ந்த சித்தி ஸமிடா ஆகியோரே விருது பெற்ற இந்த ஐவராவர்.

பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப்பின் தலைவர் கேப்டன் எச். சசிதரன் விருதுகளை வழங்கினார்.